செ.வெ.எண்.65 நாள்.04.02.2018.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை சித்தா மருத்துவக் கல்லூரி சுற்றுச்சுவரில் மாநகராட்சியின் சார்பில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் சுவர் சித்திரம் வரைதல் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

--------

திருநெல்வேலி, பாளையங்கோட்டை சித்தா மருத்துவக் கல்லூரி சுற்றுச்சுவரில் மாநகராட்சி மற்றும் சித்த மருத்துவக் கல்லூரியின் சார்பில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் சுவர் சித்திரம் வரைதல் போட்டி இன்று (04.02.2018) நடைபெற்றது. இப்போட்டியில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் சுவர் சித்திரங்கள் வரைவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி சித்தா மருத்துவக் கல்லூரி சுற்றுச்சுவர் போஸ்டர்கள் ஒட்டப்பட்டும், தனியார் விளம்பரங்கள் எழுதப்பட்டு கல்லூரி சுவர்கள் அசிங்கமாக இருந்தது. தற்பொழுது இவைகள் அழிக்கப்பட்டு, சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், தூய்மை பாரத இயக்கத்தின் மூலம் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்கும் சுவர் சித்திரம் வரைதல் போட்டி நடத்தப்படுகிறது. இதில், 15க்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்றுள்ளனர். காலை 8.00 மணி முதல் போட்டிகள் நடைபெற்று வருகிறது. சித்தா கல்லூரி சுற்றுச்சுவர்கள் விளம்பர சுவரொட்டிகளை யாரும் ஒட்டக் கூடாது. இவ்ஓவியங்கள் தூய்மை விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வரையப்படுகிறது. இவ்ஓவியப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கமும், பங்கேற்ற மாணவ, மாணவிகள் அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழ்கள் வழங்கப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாநகர நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், சித்த மருத்துவக் கல்லூரி பேராசிரியர் திரு.சுபாஷ்சந்திரன், திருநெல்வேலி மாநகராட்சி சுகாதார அலுவலர்கள் திரு.சுப்பிரமணியன், திரு.சாகுல்ஹமீது, திரு.முருகேசன், சுகாதார ஆய்வாளர்கள் திரு.இளங்கோ, திரு.நடராஜன் மற்றும் அலுவலர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.